Registered as a Newspaper in Ceylon ● ● விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஆனி 12 ஆம் நாள் ஸபர் 14 (25-6-64) வியாழக்கிழமை இதழ் 137

ஈழநாடு
சந்தா விபரம்

| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

# உணவுப் பொருள் இறக்குமதி உரிமை

## கூ.மொ.வி.ஸ்தாபனம் பொறுப்பேற்கும்

கொழும்பு, புதன்

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதி விநியோக உரிமைகள் யாவும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது. இப்பொறுப்பை உடனடியாக ஏற்றுக் கொள்ளும் உள்நாட்டு வெளிநாட்டு, விநியோக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்ன கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கு இவ்வாரத்துக்குள் உத்தரவிடக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியை எடுத்துக் கொள்வதென்பது கூட்டு அரசாங்கத்தின் 14 அம்ச உடன்படிக்கையில் ஒரு அம்சமாகும்.**

## உச்சிமகாநாடு
### லாவோஸ் தலைவர்கள் இணக்கம்

வியண்டைன், ஜூன் 24

லாவோஸ் நடுநிலைமை பிரதமர் இளவரசர் சுவர்ணபூமாவும் பதட்லாவோ தலைவர் இளவரசர் சுவர்ணவோங்கும் உச்சிமகாநாடொன்றை கூட்ட இணக்கம் தெரிவித்துள்ளனர்.

உச்சிமகாநாட்டை நடத்துவதற்குரிய இடம் சம்பந்தமாக ஒரு முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## 'ஒருமைப்பாடு' பற்றி
## திருமதி மேனனிடமிருந்து நாகநாதன் விளக்கம் கோருவார்

கொழும்பு, புதன்

இந்திய வெளிவிவகார இலாகா ராஜாங்க மந்திரி திருமதி லக்ஷ்மிமேனன் இலங்கை வந்திருந்தபோது கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் "ஒருமைப்பாடு' பற்றித் தெரிவித்திருந்த கருத்துச் சம்பந்தமாக விளக்கம் கோரப் போவதாக தமிழரசுக் கட்சி அங்கத்தவரும் நல்லூர் எம். பி.யுமான டாக்டர் நாகநாதன் தெரிவித்துள்ளார்.

டாக்டர் நாகநாதன் இது சம்பந்தமாக இந்திய ஹைகமிஷன் அதிகாரிகளை நேற்றுச் சந்தித்ததாக அறியப்படுகிறது.

பத்திரிகையாளர் மகாநாட்டில், ஒருமைப்பாடு பற்றி திருமதி மேனன் தமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கையில், இலங்கை-இந்தியர் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு தமிழர்களும், சிங்களவர்களும் ஒற்றுமைப்படவேண்டுமென அவர் கருதுகிருரா என்று கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், சிங்களத்தைக் கற்றுக்கொள்ள தமிழர்களும் தமிழைக் கற்றுக்கொள்ள சிங்களவர்களும் மறுத்தால் ஒருமைப்பாடு சாத்தியமாகாது என்ருர்.

தமிழர்கள் சிங்களம் கற்காதபடி தடைசெய்யும் ஒரு அரசியல் இயக்கம் இயங்கிவருவதை அறிய வருத்தமாகவிருக்கிறதென்றும் திருமதி லக்ஷ்மிமேனன் கருத்துவெளியிட்டிருந்தார்.

திருமதி மேனன் நாடற்றவர்களையும் இந்த ஒருமைப்பாட்டுக்குள் சேர்த்துக்கொள்ள வேண்டாமெனக் குறிப்பிட்டிருக்கமாட்டாரென நான் நம்புகிறேன் என டாக்டர் நாகநாதன் இந்திய ஹைகமிஷன் அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

ஒருவர் மற்றவரது மொழியையும் கலாச்சாரத்தையும் அழிக்காது சிங்களவர்கள் தமிழையும், தமிழர்கள் சிங்களத்தையும் கற்கவேண்டுமென்றும் இந்த அடிப்படையிலேயே ஒருமைப்பாடு ஏற்படவேண்டுமென்றும் திருமதி மேனன் கருத்துக்கொண்டிருப்பாரெனத் தாம் நம்புவதாகவும் டாக்டர் நாகநாதன் சுட்டிக்காட்டியதாக அறியப்படுகிறது.

## எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்க வேண்டும்
### மாணவ மகாநாட்டில் பேச்சு

யாழ்ப்பாணம், வியாழன்

"இன்று சமுதாயத்தின் பல்வேறு பகுதிகளான விவசாயிகள், தொழிலாளர்கள், பொறியியல் நிபுணர்கள், டாக்டர்கள் ஆகியோர் தங்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காக அணிதிரண்டு போராடும் பொழுது மாணவர்களாகிய நாங்கள் எமது உரிமைகளுக்காக குரல் எழுப்பாமல் எங்களுடைய தலைவிதியை வேறுயாராவது நிர்ணயிக்கட்டும் என்று விட்டுவிட்டு மௌனமாயிருக்க முடியாது" என்று திரு. ஜோர்ஜ், யாழ். நகரமண்டபத்தில் நேற்றுப்பிற்பகல் மாணவமகாநாட்டு பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசும் போது குறிப்பிட்டார்.

மகாநாட்டில் மாணவர்களின் பிரதிநிதிகள் பெருந்தொகையானோர் கலந்து கொண்டனர்.

அமைப்புக்குழுவின் காரியதரிசி திரு. செ. யோகநாதன் தமது அறிக்கையைச் சமர்ப்பித்து பேசும்பொழுது பொருளாதார, அரசியல், கலாசார முன்னேற்றங்கள் அனைத்தும் மாணவர்களுடைய ஸ்தாபன அமைப்பு, சிந்தனை ஆகியவற்றின் முன்னேற்றத்திலேயே தங்கியிருக்கிறது எனக் குறிப்பிட்டார்.

மாணவர்கள் அணிதிரண்டு, உயர்ந்த நோக்குள்ள, அதிக பலன்களைக் கொடுக்கக்கூடிய தேசிய கல்வித் திட்டத்தை பூரணமாக அமுல்படுத்த வேண்டுமென்று கோரவேண்டுமென்றும் இலவசக் கல்வியென்ற தொடர் இன்று அர்த்தமற்றதாகிவிட்டதென்றும் பிரவேசக்கட்டணம், வசதிக் கட்டணம், உபகரணக்கட்டணம், விஞ்ஞான நூல்நிலைய கட்டணங்கள் ஆகிய பலவிதமான கட்டணங்கள் மாணவர்களிடமிருந்து அறவிடப்படுகின்றதென்றும் குறிப்பிட்டார்.

கொழும்பிலிருந்துவந்தபிரதிநிதி திரு. கல்யானந்தா பேசும்போது இலங்கையின் வடக்கிலும் தெற்கிலுமுள்ள மாணவர்கள் அனைவரும் அணிதிரண்டு பலம்வாய்ந்த ஒரு சக்தியாகக் குரல் எழுப்பினுல் எமது உரிமைகளை கொடுப்பதற்கு அர

6-ம் பக்கம் பார்க்க

## கம்பராமாயண போட்டி முடிவுகள்
### நாளைய இதழில் வெளியாகும்

யாழ்ப்பாணம், வியா.

இலங்கை கம்பன் கழகம் நடத்திய கம்பராமாயாண சித்திரப்போட்டி முடிவுகள் நாளை வெள்ளிக்கிழமை "ஈழநாடு" பத்திரிகையில் வெளியிடப்படும். இப்போட்டியை கம்பன் கழகத்தின் ஆதரவில் "ஈழநாடு" பத்திரிகை நடத்தியிருந்தது.

# மலேசிய நெருக்கடி மோசமாகிறது
## "இராணுவ உதவிகள் அளிக்க பல நாடுகள் தயார்"

—சுகர்ணோ

### இதற்கு ரஷ்யாவும் ஆதரவாம்

ஜாகர்த்தா, ஜூன் 24

மலேசியா நெருக்கடி இப்பொழுது மோசமாகிவருவதாக சில செய்திகள் கூறுகின்றன.

இன்று ஜாகர்த்தாவில் நடைபெற்ற வைபவமொன்றில் இந்தோனேஷிய அதிபர் சுகர்ணோ பேசுகையில்; மலேசியாவை நசுக்கும் இந்தோனேஷியாவின் கொள்கைக்கு அண்மையில் நடைபெற்ற டோக்கியோ மகாநாடு அங்கீகாரம் அளித்துவிட்டதென்று கூறினர். இந்த வைபவத்தில் சோவியத் பிரதமர் மிக்கோயனும் கலந்து கொண்டார்.

"இந்தோனேஷியாவுக்கு பல கோடி நண்பர்கள் ஆதரவளிக்கின்றனர். உறவு நாடுகள் தங்களது படைகளையும் கொடுத்துதவ தயாராகவிருக்கின்றன" என்றும் அதிபர் சுகர்ணோ தெரிவித்தார்.

மலேசியாவுடனன இந்தோனேஷியாவின் எதிர்ப்புக் கொள்கைக்கு சோவியத்யூனியன் ஆதரவுகொடுத்துள்ளது. மலேசியாவுக்கு எதிரான பொருளாதார தடைகளுக்கு பல நாடுகள் ஆதரவளிக்க முன்வந்திருக்கின்றன" என்றும் அதிபர் சுகர்ணோ குறிப்பிட்டார்.

"மலேசியாவை எவ்விதத்திலும் நசுக்க இந்தோனேஷியா தயாராகிவிட்டதென்றும் அவர் அறிவித்தார்.

**அவசர ஆலோசனை**

மலேசியா பிரச்னை சம்பந்தமான டோக்கியோ மகாநாடு தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அமெரிக்க—ஆஸ்திரேலிய தலைவர்கள் பேச்சுக்கள் நடத்திவருகின்றனர்.

## அமெரிக்க தூதர் ராஜினமா
### அரசியல் வாழ்வையும் துறக்க முடிவு

வாஷிங்டன், ஜூன் 24

தென்-வியட்னுமில் அமெரிக்க ஸ்தானிகராகவிருந்த திரு. ஹென்றி கபேட் லொட்ஜ் தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளார். புதிய தூதராக ஜெனரல் டெயிலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசியல் வாழ்க்கையைத் துறந்து தனி வாழ்க்கை நடத்தப் போவதாக ஹென்றி கபேட் லொட்ஜ் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இந்த நெருக்கடியினுல் தென் கிழக்காசியாவில் யுத்தம் ஒன்று மூளக் கூடிய அபாயம் பற்றி அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

## தலைமையாசிரியர் மகாநாடு

வட-இலங்கைத் தமிழாசிரியர் சங்க ஆதரவில் 'சிங்களத்தில் தேர்ச்சி பெருத தலைமையாசிரியர்களின் சம்பளப் படியேற்றத்தை 1-10-64-இல் தடைசெய்யும்' சுற்று நிருபத்தைத் தவிர்க்கும்படி வற்புறுத்தி, ஆவன செய்தற்காக, 28-6-64 ஞாயிறு மு. ப. 10 மணிக்கு யாழ்-பாரதி பாஷிய வித்தியாசாலையில் ஓர் மகாநாடு நடைபெறும். எல்லாத் தலைமையாசிரியர்-சிரேட்ட உதவியாசிரியர்களையும் அன்போடு அழைக்கின்ருேம்.

வ. இ. த. ஆ. சங்கம்,
யாழ்ப்பாணம், 25-6-64.

ச. பொன்னுத்துரை,
காரியதரிசி.

614

### மணிவாக்கு

நாம் சுதந்திர புருஷர்களாக வாழ முடியாவிட்டால் நாம் இறப்பதில் திருப்தியடைய வேண்டும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு
ஆனி ௴ 12 உ (25-6-64)


## எல்லோருக்கும் பிரதமர்

நேரம் கிடைக்கும்பொழுது சகல தொகுதிகளுக்கும் தாம் விஜயம் செய்வதாகவும் பிரதமந்திரியென்ற முறையில் இந்நாட்டு மக்கள் எல்லோருக்கும் தாம் பிரதமரென்றும் முதல் தடவையாக தெஹியோவித்த தொகுதிக்கு உத்தியோகபூர்வமாக விஜயம்செய்த பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கூறியிருப்பது மகிழ்ச்சியையும் அதேசமயம் ஆச்சரியத்தையும் அளிப்பதாக இருக்கிறது.

இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் தாம் பிரதமர் என்று கூறியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அரசாங்கத்தைச் சேர்ந்த மந்திரிகள் பலரும், எம். பி.க்களும்கூட தமிழ்ப் பகுதிகளுக்கு விஜயம் செய்யும் நேரத்தைத் தவிர இதர சமயங்களில் இந்நாட்டில் சிங்களம் பேசாத சிறுபான்மைச் சமூகத்தினர் இருப்பதாகவோ அவர்களுக்கும் தாங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் இருப்பதாகவோ கூறியது கிடையாது. இந்நாட்டு மக்களின் மொழியான சிங்களத்துக்கு உரிமை பெற்றுத் தந்தோம் என்றுதான் குறிப்பிடுவது அவர்கள் வழக்கம். பிரதமமந்திரிகூட சிலசந்தர்ப்பங்களில் சிங்கள மக்களை மட்டும் கருத்தில் கொண்டு அவர்களுக்கு மட்டுமே தாம் பிரதமமந்திரியென்ற முறையில் அறிக்கை விடுத்திருக்கிறார். தெஹியோவித்தையில் அவர் எல்லோருக்கும் தாம் பிரதமமந்திரி என்று கூறியது சிங்கள மக்களைமட்டும் கருத்தில் கொண்டு கூறினாரா வென்பது தெரியவில்லை. என்னுலும் இந்நாட்டிலுள்ள சகலருக்கும்தாம் பிரதமமந்திரியென்பதை அவர் உணர்ந்து கொண்டால் அதனுல் நிச்சயம் பயன் ஏற்பட முடியுமென எதிர்பார்க்கலாம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் 1956-ம் வருடத்தில் ஆட்சிக்கு வந்தபின்னர் பிரதமமந்திரியின் மனைவியென்ற முறையிலாவது 1960ம் ஆண்டு அதேகட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தபின்னர் பிரதமமந்திரி என்ற முறையிலாவது திருமதி பண்டாரநாயக்கா தமிழ்ப்பகுதிகளுக்கு குறிப்பாக வடமாகாணத்துக்கு இன்னும் விஜயம் செய்யவில்லை. வெளிநாடுகள் பலவற்றுக்கும் உத்தியோக ரீதியிலும், சமாதானப் பணியிலும் விஜயம் செய்த பிரதமருக்கு வடபகுதிக்கு வருவதற்கு நேரம் கிடைக்கவில்லையென்று கூறமுடியாது.

இதுவரை அவர் வடபகுதிக்கு விஜயம் செய்ய முடியாதிருப்பதற்குரிய காரணம் தெளிவு. அதை விளக்க வேண்டிய அவசியமில்லை. ஆனுல் இதேநிலை தொடர்ந்தும் இருப்பது நாட்டுக்கோ நாட்டின் பிரதமமந்திரியென்ற முறையில் அவருக்கோ நிச்சயம் பெருமையளிக்காது. உலகிலேயே ஒருநாட்டின் பிரதமமந்திரியாகப் பதவி வகிக்கும் முதல்பெண்மணியான திருமதி பண்டாரநாயக்காவைப் பார்க்கவும் அவருக்கு வரவேற்பளித்துக் கௌரவிக்கவும் தமிழ்பேசும் மக்களுக்கு ஆவல் இல்லாமல் இல்லை. ஆனுல் இந்நாட்டின் ஒருபகுதி மக்களுக்குள்ள உரிமைகள் தங்களுக்கு மறுக்கப்பட்டு வருவதால் வேதனையடைந்துள்ள தமிழ்பேசும் மக்கள் பிரதமரை இந்நிலையில் வரவேற்கத் தயாராக இருக்கமாட்டார்களென்பது பிரதமருக்கே தெரிந்திருக்க வேண்டும்.

ஆனுல் இந்நாட்டின் பிரதமமந்திரியென்ற முறையில் பெரும்பான்மை சமூகமக்களை நடத்தும் அதேமுறையில் சிறுபான்மை சமூகமக்களையும் நடத்துவதுடன் அவர்களுக்குள்ள அதே உரிமைகளையும் வழங்குவதற்கு முன்வந்தால் பெரும்பான்மை மக்கள் அளிக்கும்வரவேற்புகளைவிடச் சிறந்த முறையில்பான்மைமக்கள் வரவேற் பளிப்பதுடனி நாட்டின் முன்னேற்றத்துக்கும்பூரணஒத்துழைப்பும் ஆதரவும் அளிப்பர் என்பது உறுதி. இந்திய சீன எல்லைத் தகராறுக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்காக பீக்கிங்கிற்கும் புதுடில்லிக்கும் சென்று முயற்சி செய்த பிரதமர் சிறுபான்மையினரின் பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வு காண தமிழ்பேசும் மக்களின் பகுதிகளுக்குச் செல்ல வேண்டியதில்லை. கொழும்பிலிருந்தபடியே தீர்வு கண்டுகொண்டு, சிறுபான்மை மக்களுக்கும் தாம் பிரதமமந்திரியென்பதை அவர்களுக்கும் உலகுக்கும் உணர்த்தும் பொருட்டு தமிழ்பேசும் பகுதிகளுக்கு அவர் விஜயம் செய்ய முடியும். இந்த நன்னுள் விரைவில்வரவேண்டுமென்பதே எமது விருப்பம்.

# பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சை முடிவுகள்

**பல்கலைக்கழகக் கலைப் பிரிவுப் புகுமுக தேர்வுக்குத் தோற்றி சித்தியடைந்த தமிழ் மாணவர்களின் விபரங்கள் வருமாறு:-**

### கொழும்பு

வி எம். எஸ். பெண்கள் கல்லூரி:

செல்விகள்: ஜே. கனகரத்தினம், பி. கணபதிப்பிள்ளை, பி. கந்தசாமி, எச். பி. நல்லையா, எஸ். எஸ். நமசிவாயம், ஆர். ரஹீம், வை. ரஹீம், ஆர். சுப்பிரமணியம்.

பரிசுத்த திருக்குடும்ப கன்னியாஸ்திரிகள் பாடசாலை

செல்விகள்: டி. சின்னத்தம்பி, டி. டபிள்யூ. சித்திரலதா.

சைவமங்கையர் வித்தியாசாலை:

செல்விகள்: டபிள்யூ இந்திரன், எம். வேலாயுதபிள்ளை

அர்ச். பிறிஜெட்ஸ் கொன்வென்ற்:

செல்வி: எஸ். ராசையா,

சஹிராக் கல்லூரி

எம். எல். அப்துல் காதர், பி. பி. அப்துல் ஹமீத், எம். எம். பாவி ஏ. எம். எச். முஹமது, எம். எச். முஹமது ஹனிபா, எல். உமர்லெப்பை, எம். எம். ஸியார்ட்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் (கொழும்பு):

ஆர். கார்த்திகேசு, பி. முருகேசு, வி. சுவாமிநாதன், இ. தர்மலிங்கம், கே. ராஜரத்தினம், செல்வி ஜே. ஏ, திலகவதி.

### மாத்தளை

பாக்கிய வித்தியாலயம்:

செல்வி. எஸ். செல்லத்துரை.

### கண்டி

அர்ச். சில்வஸ்டர் கல்லூரி: என். பாலச்சந்திரன்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் (கண்டி)

செல்விகள்: எஸ். பி. ஷரீப், பி. கே. புவனேஸ்வரி, கே. சண்முகநாதன்.

### யாழ்ப்பாணம்

அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி:

கே. தியாகராஜா, கே. மத்தாய், செல்வி. ஆர். எஸ். பகவதி.

வல்வெட்டித்துறை, சிதம்பராக் கல்லூரி:

வி. நாகேந்திரன், கே. சண்முகநாதன். செல்விகள்: எம். ராஜேஸ்வரி, வி. சின்னத்துரை.

யாழ்ப்பாணம் பரிசுத்த திருக்குடும்ப கன்னியாஸ்திரிகள் பாடசாலை

செல்விகள்: ஏ. அந்தோனிப்பிள்ளை, எல். ஆர். ஐயப்பிள்ளை, டி. பாலசுப்பிரமணியம். பி. எம். டொமிங்கோபிள்ளை, எம். பிரான்ஸிஸ், வி. வி. யோசப்பு, வை. கந்தையா, ஜே. டி. எஸ். தோமஸ்.

இளவாலை, திருக்குடும்ப கன்னியாஸ்திரிகள் பாடசாலை:

செல்விகள் எம். எம். ஜோனையாஸ், டி. பி. மாசெலின், எஸ். கே. ஸரானிசுலாஸ், எம். வி. சுவாமிப்பிள்ளை.

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக்கல்லூரி:

ஈ. ஸ. ஆறுமுகராஜா, வி. மகாலிங்கம், ஏ. தர்மராஜா, செல்வி எஸ. செல்லையா.

யாழ். மத்திய கல்லூரி எம். ஜெயராமச்சந்திரன், கே. சாம் பசிவம்.

யாழ் இந்துக்கல்லூரி: பி. பாலசுப்பிரமணியம், எஸ. கருணநிதி, ஆர். எஸ. ஐ. குமாரசுவாமிசர்மா, டி. சிதம்பரநாதன், டி. சிவபாதசிங்கம், டி. சிவேஸ்வரதம்பி, ஏ. தவேந்திரன்.

கோப்பாய், கிறிஸதவ கல்லூரி:

ஏ. பாலசுப்பிரமணியம், எஸ. தம்பித்துரை, கே. அரவிந்தகுமாரி, டி. கமலாதேவி, ஏ. ராஜயோகமலர், எஸ. ரத்தினேஸவரி.

கொக்குவில் இந்துக்கல்லூரி:

கே. தர்மராஜ, கே. வி. சிவநேசன், செல்விகள்: எம். ஐயாத்துரை, கே. ராமச்சந்திரன், என். சோமசுந்தரம், டி. தம்பு.

தெல்லிப்பளை, மஹாஜனக் கல்லூரி:

என். அரியபுத்திரன், எஸ. அமிர்தலிங்கம், எம். பாலலிங்கம், பி. ஜீவரத்தினம், ஆர். மருமலிங்கம, கே. ருத்திரமூர்த்தி, ஏ. ஷண்முகம், கே. சரவணபவன், வி. செல்லத்துரை, எம். செல்வநாயகம், பி. சிங்காரம், செல்விகள் கே. வல்லிபுரம், கே. கிருஷ்ண, டி. கணபதிப்பிள்ளை.

மானிப்பாய், இந்துக்கல்லூரி:

எம். சின்னத்துரை, ஜே. தவராஜசிங்கம், என். விஜயலட்சுமி.

பருத்தித்துறை, மெதடிஸக் பெண்கள் பாடசாலை:

செல்வி: டி. சிவகுருநாதன்.

நெல்லியடி மத்ய மகாவித்தியாலயம்:

எம். ஏரம்பமூர்த்தி, எம். நடேசலிங்கம், எம். நவரத்தினராஜா, ஏ. செல்வராஜா.

சுண்டிக்குளி, பெண்கள் கல்லூரி

செல்விகள்: எம். சோமசுந்தரம், எம், சுப்பிரமணியம், ஐ. தம்பு, எஸ. திருஞானசம்பந்தர்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி:

எஸ. யேசுதாசன், எம். மகேஸவரன், கே. நாகராஜா, இ. சற்குணநாதன், வி. திரிசங்கு.

பருத்தித்துறை ஹார்லிக் கல்லூரி:

டி. கே ஜயபாலன், எம். கதிரவேற்பிள்ளை, கே. சிவரத்தினம், கே. தவபாலன்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி:

செல்விகள் ஜே. ஏகாம்பரம், பி. கனகசபாபதி. என். பெரியான்பிள்ளை, வசந்தாதேவி சிவலிங்கம், ஆர். வேலுப்பிள்ளை, எஸ. வேலுப்பிள்ளை.

நயினுதீவு மகா வித்தியாலயம்:

செல்வி கே. நாகேஸவரி:

பண்டைத்தரிப்பு பெண்கள் கல்லூரி செல்வி எம். ராஜரத்தினம்.

ராமநாதன் கல்லூரி:

எம். ஜெயகுமாரி, கே. கனகாம்பிகை, எஸ. கருணவதி. வி. கேதாரகௌரி, என். லீலாவதி, டி. நாகேஸவரி, கே. பரமேஸவரி எம். பத்மலோஜனி, வி. பேரின்பராணி, ஏ. பூங்கோதை, ஆர். ராஜேஸவரி, எம். சரோஜாதேவி, ஐ. சௌந்தரேஸவரி, ஆர். தெய்வமலர், எஸ. விமலாதேவி, வி. யோகசௌந்தரி, வி, யோகசௌந்தரநாயகி.

திருநெல்வேலி, செங்குந்தர் இந்துக் கல்லூரி

ஜே. யோகேந்திரநாதன், கே. கனகசபை, என். குழந்தைவேலு, ஆர். காந்திமலர், கே. கனகம்மா, கே. லோகராணி, கே. மணிமேகலாதேவி, பி. பராசக்தி, பி. ராஜலக்ஷ்மி, ஏ. சுலோஜனு.

சுன்னுகம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி

எஸ. பத்மநாதன், டி. அரியரத்தினம், எஸ். செல்லையா, வி. சிற்றம்பலம், ஏ. சிவநாதநாதன், டி. சுப்பிரமணியம், கே. தம்பிராசா. செல்விகள்: ஏ. அமிர்தலிங்கம், எஸ். கந்தையா.

புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி

எஸ். குணசிங்கம், என். முருகையா, பி. சுந்தரராஜன், எஸ். சுந்தரலிங்கம்.

ஸ்ரான்லி, மத்திய மகா வித்தியாலயம்

ஏ. கனகேந்திரன், ஏ. பஞ்சாக்ஷரம், கே பேரின்பநாயகம்.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி

கே. எஸ். ஜயேந்திரன், ஆர். சத்தியரூபன்.

தெல்லிப்பளை, யூனியன் கல்லூரி

ஏ. இந்திரன்.

உரும்பராய், இந்துக் கல்லூரி

எஸ. பாலசுப்பிரமணியம்.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

செல்விகள்: ஏ. கனகரத்தினம், எம். கந்தையா, எஸ். கார்த்திகேசு, ஜி. சேனாதிராஜா, பி. சேதுபதி.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி

செல்வி. என். ஞானம்பிகை.

வண்ணை, வைத்தீஸ்வர வித்தியாலயம்

ஏ. குணநாயகம், இ. நல்லநாதன், எஸ். ஷண்முகவடிவேல், எம். சுந்தரலிங்கம், எஸ். தில்லைநடேசன்.

வேலணை. மத்திய மகா வித்தியாலயம்

வி. குணரத்தினம், வி. மாணிக்கவாசகர், எஸ். சடாக்ஷர சண்முகதாஸ்.

வேம்படி மகளிர் கல்லூரி

செல்விகள்: பி. செல்லையா, எஸ். குமாரசிங்கம், எம். நவரத்தினம், கே. பெருமையினர், கே. சதாசிவம், எல். தருமலிங்கம், எஸ். வல்லிபுரம்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் (யாழ்ப்பாணம்)

எஸ். அப்பத்துரை, ஏ. கணேஸ்வரி, எஸ். இந்திரமலர், எஸ். கந்தசாமி, வி. கந்தையா, எஸ். முத்து, ஆர். பொன்னையா, ஏ. புனிதவதி, எஸ். செல்வமலர், ஆர். சோமசுந்தரம், பி. தம்பு, கே. தவமணி, எஸ். யோகமணி, கே. நாகேந்திரன், எஸ். எஸ். பேரானந்தன், எஸ். சைநீவிபகவான், எஸ். சிவஞானசுந்தரம், ஆர். துரைராஜா, எஸ. அந்தோனிப்பிள்ளை, எஸ். ஏகாம்பரம், எஸ். ஜெகநாதன்.

கோட்டை முனை மகவித்தியாலயம்

எம். சாமுவேல்.

(6-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

நேரே மதுரைக்கு ஏன் சென்றேன் தெரியுமா? பூழியர் கோனும் வெற் பொழித்த புகலியர் கோனுமான திருஞானசம்பந்தசுவாமிகளின் குருபூசை வியாழனன்று வருவதாயும், மதுரை ஆதீனத்திலும், கோவிலிலும் அது மிக விசேஷமென்றும் அவசியம் பார்க்கவேண்டுமென்றும் கொழும்பிலே ஓர் அன்பர் கூறியதால் தான்.

சைவசமயத்துக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டிருந்த காலத்திலே பாலவாயொரு பாலனை ஞானசம்பந்தர், பாண்டியன் வழுதிக்கு மாபெரும் தேவியான மங்கையர்க்கரசியின் அழைப்பை ஏற்று மதுரை மாநகர் சென்ருர். ஆனை மாமலை யாதியாய இடங்களில் ஈனர்களால் அவருக்குப் பல பல அல்லங்கள் ஏற்பட்டன. திரு ஆலவாய் அரனின் திருவருள் முன்னிற்க வெற்றிக் கொடி நாட்டியது அந்த இளம் சைவச்சிங்கம். அவரது குருபூசைத் திருநாள் மதுரையிலே இன்றும் மிக விசேஷமாக நடக்கின்றது.

நேருஜியின் மறைவு காரணமாக இம்முறை குருபூசை நின்றுவிடுமோ என்று அஞ்சினேன். ஆனுல் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்திலும், கோவிலிலும் வழக்கம்போல் இவ்வைபவம் சிறப்பாக நடந்தது.

மதுரை மீனுட்சி கோவில் நிர்வாகம் முன்னர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் கீழ் தான் இருந்ததாம். தமிழகத்திலுள்ள பல ஆதீனங்களிலும் இதுதான் மிகவும் பழமையானது. இப்போது பீடத்திலுள்ளவர், கொழும்பிலே பிரபல வர்த்தகராக இருந்து துறவு பூண்ட ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள். இவர் 293-வது மகாசந்நிதானமாவார். சரித்திரப்பிரசித்தம் வாய்ந்த இக்கோவில் நிர்வாகம் இடைக்காலத்திலே இந்து தர்ம பரிபாலன போர்டின் கைக்கு மாறியது. என்ருலும் மடத்துக்கும் கோவிலுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இன்றும் உள்ளதென்பதை அன்று கண்டேன்.

* * *

குருபூசையன்று அதிகாலை 4 மணிக்கு மதுரை கோவிலிலிருந்து யானை, ஒட்டகம், மேளதாளங்கள், எடுபிடி முதலியவற்றுடன் நிர்வாக அதிபர், மதுரை மடத்துக்கு வந்து மகா சந்நிதானத்தை கோவிலுக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்ருர். ஊரெல்லாம் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தும், இந்த வைபவம் மட்டும் தடைபடவில்லை. கோவிலிலே எல்லா மூர்த்திகளுக்கும் வெள்ளிக் கவசம் சார்த்தி விசேஷ அலங்காரம் செய்திருந்தார்கள். எல்லா மூர்த்திகளையும் மகா சந்நிதானம் அன்று மட்டும் தான் தரிசிப்பது வழக்கமாம்.

அங்கையற்கண்ணியையும் ஆலவாய் அண்ணலையும், ஞானசம்பந்த பீடாதிபதி தரிசிக்கும் வைபவத்தைக் கண்டபோது, பழையசைவ சரித்திரமெல்லாம் நினைப்பு வந்தது. பல காரணங்களால் வேறு மதங்களுக்கு மாறியவர்களில் பலர் ஞானசம்பந்த பீடாதிபதியிடம் வந்து மீண்டும் சைவர்களாகச் சேர்வதாயும், இதுவரை இரண்டாயிரம் குடும்பங்களுக்கு மேல் இவ்விதம் சைவசமயத்தில் மீண்டும் சேர்ந்திருப்பதாயும், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அங்கு இவ்வித மதமாற்றங்கள் நடப்பதாகவும் அறிந்தேன். இச்செய்தி அவ்வப்போது மதுரை தினசரிப் பத்திரிகைகளில் வெளியாகின்றன.

* * *

மதுரை சென்ருல் "ஆனைப்பால்" அவசியம் சாப்பிடுங்
6-ம் பக்கம் பார்க்க

# காமன்வெல்த் ராணுவ உதவியை மலேஸியா நாடும்

## துணை பிரதமர் அறிவிப்பு

கோலாலம்பூர், ஜூன் 24

போர்னியோ நெருக்கடி சம்பந்தமாக காமன்வெல்த் நாடுகளின் ராணுவ உதவியை மலேஸியா கோரும் என துணைப்பிரதமர் துன் அப்துல் ரஸாக் கூறினர்.

இந்தோனேஷியாவிடமிருந்து மலேஸியாவைப் பாதுகாக்க எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்படும் என அவர் கூறினர்.

அதேசமயம் போர்னியோவுக்கு பெருமளவில் இந்தோஷிய கொரில்லாக்கள் வந்து கொண்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

இந்தோனேஷியாவுக்கு இப்போது விஜயம் செய்திருக்கும் சோவியத் உதவிப் பிரதமர் திரு. மிக்கோயன் ஜனாதிபதி சுகர்னோவையும் இதர மந்திரிகளையும் சந்தித்து ஆலோசனை நடத்தினர். மலேஷியா சம்பந்தமான இந்தோனேஷியாவின் கொள்கைக்கு ரஷ்யா ஆதரவளிக்கும் என அவர் கூறியதாக வெளிநாட்டுமந்திரி டாக்டர் சுபந்திரியோ கூறினர்.

பாலிதீவில் திரு. மிக்கோயன், இந்தோனேஷியத் தலைவர்களுடன் தொடர்ந்து பேச்சு நடத்துவார் என அறிவிக்கப்படுகிறது.

## இலங்கை பிரதிநிதி

ஜெனிவா, ஜூன் 24

ஆசியாவின் மனித சக்தியைப் பூரணமாகப் பயன்படுத்த சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் திட்டம் வகுக்கவேண்டும். என இலங்கைப் பிரதிநிதி திரு. டி. ஆர். விஜேவிக்கிரம ஸ்தாபனக் கூட்டத்தைக் கேட்டுக்கொண்டார்.

## ஆயுதங்களைக் குவிக்கும் அமெரிக்கா

சைகோன், ஜூன் 24

தென் வியட்னாமிலும், தாய்லாந்திலும் அமெரிக்க விமானங்கள் ஆயுதங்கள், தளபாடங்கள், இதர யுத்தக்கருவிகள், சாதனங்கள், வெடிமருந்துகள் ஆகியவற்றைப் பெருமளவில் இறக்கிவருவதாக அறிவிக்கப்படுகிறது.

# மாபெரும் பிரிட்டிஷ் நூலகம் புதிய இடத்திற்கு மாறும்

## 70,00,000 புத்தகங்கள் அகற்றப்படும்

லண்டன், ஜூன் 24

உலகின் மிகப்பெரிய பிரிட்டிஷ் மியூஸியம் நூல்நிலயத்திலிருக்கும் 70 லட்சம் புத்தகங்களை புதிய இடத்திற்கு மாற்றும் மாபெரும் பிரச்னை பிரிட்டிஷ் நூதனப் பொருட்காட்சி ஸ்தாபனம், லண்டன் நகரசபை அதிகாரிகள் ஆகியோருக்கு ஏற்பட்டுள்ளது.

இது சாதாரணமாகப் புத்தகங்களை ஏற்றி அனுப்பும் வேலையல்ல. புதிய கட்டிடங்களுக்கு 8 ஏக்கர் நிலம் சுத்திகரிக்கப்பட வேண்டும். அப்பகுதியிலுள்ள குடியிருப்பாளர்கள், கடைக்காரர்கள், காணிக்காரர்கள் ஆகியோரின் ஆட்சேபனைகள் ஏற்கப்பட வேண்டும்,

நூலக அதிபர் வழிகாட்டும் விஷயஞானம் உள்ளவராயும், ஒரு தத்துவஞானியாகவும் நட்புடன் பழகும் இனியராகவும் இருக்க வேண்டும் என்பது பிரிட்டிஷ் மரபு.

# 1964-ம் ஆண்டு "கலிங்கபரிசு" பிரிட்டன் போட்டியிடும்

லண்டன், ஜூன் 24

பாரிஸ் "யுனெஸ்கோ" காரியாலயத்தில் இவ்வாண்டு வழங்கப்படவிருக்கும் 1964-ம் ஆண்டுக்கான கலிங்கப் பரிசுக்காக பிரிட்டன் ஒரு சினிமாப்படத்தைச் சமர்ப்பிக்கவிருக்கிறது.

சர்வதேச சௌஜன்யம், கூட்டுறவு ஆகியவற்றுக்கு அதிக சேவை செய்யவும் மிகச்சிறந்த படத்துக்கு 2000 பவுண் கொண்ட கலிங்கப் பரிசு வழங்கப்படுகிறது. சினிமாப்படங்களை உற்பத்தி செய்யும் சகல உலகநாடுகளும் இந்தப்பரிசுக்காகப் போட்டியிடுகின்றன

சிறந்த படம் ஒன்றை தேர்ந்தெடுத்து அனுப்ப தங்கள் படங்களைச் சமர்ப்பிக்குமாறு பிரிட்டிஷ் உற்பத்தியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

சினிமா, அல்லது டெலிவிஷன் படங்கள் ஏற்கப்படும். ஆனல் 25 நிமிடங்கள் அல்லது அதற்குமேல் ஓடக்கூடிய படமாகவும் 1963 ஜனவரிக்கும் 1964 ஜூன் மாதத்திற்குமிடையில் எடுக்கப்பட்ட படமாகவும் அது இருக்க வேண்டும்.

2000 ஆண்டுகளுக்குமுன் இந்தியாவிலிருந்து இந்தோனேஷியாவரை விரிந்து பரந்து கிடந்த கலிங்க சாம்ராஜ்யத்தின் பெயர் இப்பரிசுக்குவைக்கப்பட்டிருக்கிறது. மகா அசோகன், இவ்வளவு பெரிய மகா சாம்ராஜ்யத்தைக் கைப்பற்றித் தன் ஆதிக்கத்துக்குள் கொண்டுவந்தபோதிலும் இறுதியில் யுத்தமே செய்வதில்லை என்றும் வாழ்வின் எஞ்சிய நாளில் சமாதானத்துக்குப் பாடுபடுவதென்றும் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டான் என்பது குறிப்பிடத்தக்கது.

# வறுமை, வேலையின்மையை ஒழிக்க 4-ம் திட்டம்

## சாஸ்திரி யோசனை

புதுடில்லி, ஜூன் 24

வறுமை, வேலையின்மை ஆகியவற்றைச் சமாளிக்கும் வகையில் 4-வது திட்டம் விசேஷமாக அமைக்கப்பட வேண்டுமென பிரதமமந்திரி திரு. லால் பகதூர்சாஸ்திரி திட்டக்கமிஷனில் கூறினர். கமிஷனின் தலைமைப் பொறுப்பை ஏற்றபின் அவர் முதல்தடவையாக நேற்றைய கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

கடுத்தர, கிராமத்தொழில் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வேலைவாய்ப்புக்களைக் கொண்ட வகையில்திட்டம் அமைய வேண்டும் என்றும் அவர் கூறினர்.

திட்டக்கமிஷனின் ஆரம்ப காலத்தில் காலஞ்சென்ற திரு. நேரு வழி காட்டியவிதத்தை பிரதமமந்திரியும் உபதலைவர் திரு அசோக்மேத்தாவும் புகழ்ந்துரைத்தனர்.

## நேரு ஞாபகச்சின்ன ஆயத்தக் கமிட்டி

புதுடில்லி, ஜூன் 24

காலஞ் சென்ற திரு. நேருவுக்கு தேசிய நினைவுச்சின்னம் ஒன்றை அமைப்பது பற்றிய கமிட்டியின் ஆயத்தக் கூட்டம் உப ஜனாதிபதி டாக்டர் ஸகிர் ஹுஸெய்ன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம மந்திரி, காமராஜ், ஸ்ரீமதி இந்திராகாந்தி, திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி, திரு. நந்தா ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

இது சம்பந்தமாக நிதி உதவியளிக்க வேண்டுகோள் விடப்படும் என திரு. நந்தா கூட்டத்தில் தெரிவித்தார்.

## பக்தவத்சலம் தேக நிலைமை

சென்னை, ஜூன் 24

கார் விபத்து காரணமாக ஆஸ்பத்திரியில் இருக்கும் தமிழ் நாட்டு முதன் மந்திரியின் தேக நிலை திருப்தியாக முன்னேறி வருகிறது. என்றும் ஆனல் அவர் மேலும் சிலவாரங்கள் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் டாக்டர்கள் கூறினர்.

# "கயானவுக்கு விரைவில் சுதந்திரம் வழங்குக"

## ஐ. நா. காலனி கமிட்டியில் தீர்மானம் நிறைவேறியது

நியூயோர்க், ஜூன் 24

பிரிட்டிஷ்கயானவுக்கு விரைவில் சுதந்திரமளிக்க ஒரு திகதியை நிர்ணயிக்க வேண்டுமென இந்தியாவிடம் 11 நாடுகள் பிரிட்டனைக் கோரும் தீர்மானத்தை ஐ. நா. காலனிகள் பற்றிய விசேஷ கமிட்டி ஏற்றுக் கொண்டது.

18 நாடுகள் இதற்கு ஆதரவு அளித்தன. பிரிட்டன், அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியநாடுகள் எதிர்த்து வாக்களித்தன.

அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் தீர்மானம் கோரியது.

3 பேரடங்கிய ஐ. நா. பரிசீலனைக்குழு ஒன்றை கயானவுக்கு அனுப்பவும் தீர்மானம் வழிசெய்கிறது.

## யு.எஸ். ஜனத்தொகை 19 கோடி

வாஷிங்டன், ஜூன் 24

அமெரிக்காவின் மொத்த ஜனத்தொகை இப்போது 19,20,00,000 ஆகப் பெருகியிருக்கிறது. 1960-ம் ஆண்டு எடுக்கப்பட்ட ஜனத்தொகையை விட இது 1,30,00,000 அதிகமாகும்.

## மாலைதீவு சுதந்திர பேச்சு

லண்டன், ஜூன் 24

மாலைதீவுக்கு விடுதலை அளிக்கும் விஷயம்பற்றி லண்டனில் பேச்சு நடத்தப்பட்டு வருவதாய் மந்திரி திரு. டங்கன் சாண்ட்ஸ் கூறினர்.

## தென்வியட்னமில் மாக்ஸ்வெல்டெய்லர் யு. எஸ். தூதர்

சைகோன், ஜூன் 24

தென் வியட்னமில் அமெரிக்கத் தூதராய் இருந்த திரு. ஹென்றி கெபட்லாட்ஜ் ராஜினமாச் செய்து விட்டார். அமெரிக்க முப்படைத் தலைவர் ஜெனரல் மாக்ஸ்வெல் டெய்லர் புதிய தூதராக நியமிக்கப்பட விருப்பதாக அறிவிக்கப் பட்டது.

## டாங்கே குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூன் 24

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து தம்மால் விலக்கப்பட்ட 32 பேரும் சீன ஏஜண்டுகள் என திரு. எஸ். ஏ. டாங்கே குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

# ஒலி அலைகளில் இயங்கும் புதிய "சேர்ச்லைட்"

## மீன்பிடித்துறையில் பெரிதும் பயன்படக் கூடியது

லண்டன், ஜூன் 24

மீன்பிடித்துறையில் மிகவும் பயனளிக்கக்கூடிய 'சேர்ச்லைட்' ஒன்றை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ஒலி அலைகளின் பிரதிபலிப்பை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கருவி இயங்குகின்றது. ஒளி அலைகள் பொருட்களில் பட்டு ஒளிமுறிவு ஏற்படுவதுபோல ஒலி அலைகள், தண்ணீரின் கீழுள்ள வஸ்துக்களில் பட்டு பிரதிபலிக்கின்றனவாம். ஒளி அலைகள் செல்லமுடியாத தண்ணீரின் அடிப்பாகங்களில் இந்த ஒலி அலைகள் சென்று அங்குள்ள வஸ்துக்களில் பட்டு பிரதிபலிக்கின்றன. இந்த பிரதிபலிப்பை டெலிவிஷன் போன்ற ஒரு குழாய் படம் பிடித்துக் காட்டக்கூடியதாக இந்த 'சேர்ச்லைட்'டில் சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. காற்றில் செல்லும் வேகத்தைவிட ஐந்து மடங்கு வேகத்துடன் தண்ணீரில் செல்லும் ஒலி அலைகள் தண்ணீரின்கீழ் அதிக தூரத்தில் உள்ள வஸ்துக்களையும் இந்த 'சேர்ச்லைட்' மூலம் படம்பிடித்துக்காட்டும்.

இப்புதிய சாதனத்தை இப்பொழுது லண்டனில் உள்ள கம்பனிகள் தயாரிக்கின்றன. மிக விரைவில் கிடைக்கக்கூடிய இச்சாதனம் மீன்பிடித்துறையில் மிகவும் பயன்படக்கூடியதாகும். ஒலி அலைகளின் பிரதிபலிப்பைக்கொண்டு என்ன தெரிகிறது, மீனுக இருந்தால் என்ன இனத்தைச் சேர்ந்தது என்பதைக்கூட கண்டுகொள்ளலாம்.

## ஸகிர் ஹுஸெய்ன்

புதுடில்லி, ஜூன் 24

இந்திய உதவி ஜனாதிபதி டாக்டர் ஸகிர் ஹுஸெய்ன் அல்ஜீரியா, மொராக்கோ, டுனிஸியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யும் பொருட்டு இன்று புறப்பட்டார். அடுத்த மாதம் 13-ம் திகதி அவர் டில்லி திரும்புவார்.

## திருப்பி அழைத்தனர்

பீகிங், ஜூன் 24

மங்கோலியாவின் வேண்டுகோள்படி கடந்த சில மாதங்களில் சீனு தனது 5200 தொழிலாளர்களை அங்கிருந்து திருப்பியழைத்துக் கொண்டது. மங்கோலியா ரஷ்யாவை ஆதரிக்கும் நாடு.

# ஐ. நா. வில் ஹமர்ஷீல்ட் ஞாபகார்த்த சின்னம்

லண்டன், ஜூன் 24

காலஞ்சென்ற முன்னுள் ஐ. நா. பொதுக்காரியதரிசி திரு. டாக்டர் ஹமர்ஷீல்டினுல் வெகுவாகப் புகழப்பட்ட பிரபல பிரிட்டிஷ் சிற்பி செல்வி பார்பரா ஹெப்வேர்த் இம்மாதம் ஐ. நா. தலைமைக் காரியாலயத்தில் திறந்து வைக்கப்பட்ட ஹமர்ஷீல்ட் வெண்கல ஞாபகார்த்தத்திற்குப் பொறுப்பாய் இருந்தார்.

1961-ம் ஆண்டு ஹமர்ஷீல்ட் ஆபிரிக்காவில் விமானவிபத்திற்குப் பலியாகுமுன் இந்த ஞாபகார்த்த சின்னம்பற்றி செல்வி பார்பராவுடன் விவாதித்தார்.

ஹமர்ஷீல்டின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட இந்த சிற்பம் நாலரை டன் பாரமும், 21 அடிஉயரமும், இரண்டரைஅடி கனமும் 16 அகலமும்கொண்டதாகும்.

## காமன்வெல்த்

லண்டன், ஜூன் 24

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் உலகிற்கு காமன்வெல்த் வழிகாட்ட முடியுமென காமன்வெல்த் வர்த்தகசபைத் தலைவர் திரு. எச். அலன்வாக்கர் கூறினர்.

இந்த நாடுகளின் வாழ்க்கைத்தரம் உயராவிட்டால் காமன்வெல்த் கூட்டுறவுக்கே அது ஆபத்தாய் முடியும் என்றும் இது ஒரு உலகப்பிரச்னை என்றும் அவர் கூறினர்.

## அரசாங்க கம்பெனி

புதுடில்லி, ஜூன், 24

இனிநாட்டில் அமைக்கப்படும் எல்லா எஃகு ஆலைகளின் கட்டுமான வேலையிலும் பங்கு கொள்ள அரசாங்கக் கம்பெனி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## நேரு நினைவு விழா

யாழ்ப்பாணம், புதன்

பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஏழாலை வடக்கு கலாநிதி சனசமூக நிலையத்தில் 'நேரு நினைவு விழா'க் கொண்டாடப்பட்டது. திருவாளர்கள்: எஸ். வி. மாணிக்கவாசகர், ச. முருகேசம்பிள்ளை, எஸ். தியாகராசா, த. துரைசிங்கம், சி. ஆறுமுகம் ஆகியோரும் செல்வன் இ. பாஸ்கரலிங்கமும் உரைநிகழ்த்தினர்.

## அண்ணமலையில் வங்க மொழி

கௌஹாட்டி, ஜூன் 24

அண்ணமலை சர்வகலாசாலையில் வங்காள மொழி போதிக்கும் பொறுப்பை திரு. வி. பட்டாச்சார்யா ஏற்றுக்கொண்டிருக்கிருர்.

## கோரிக்கை பலனளிக்கிறது

குருநாகலை, புதன்

அரசாங்க உத்தியோகஸ்தர்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு வேலைக்கு வரவேண்டுமென்ற புதிய நிதிமந்திரியின் உத்தரவின் பின் இப்போது இங்குள்ள காரியாலயங்களில் வேலைகள் ஒழுங்காக நடைபெறுவதாக அறியப்படுகிறது.

அறிவித்தல்கள் முன்னரிலும் பார்க்க மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் நிறைவேற்றப்படுவதாகவும் தெரிய வருகிறது.

# இன, மத பாகுபாடு பொலிஸ் படைக்கு கிடையாது

## மனித உயிரின் விலை மிகவும் மலிந்து விட்டது

## பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அறிக்கை

கொழும்பு, புதன்

இலங்கை பொலிஸ்படை ஒரு ஸ்தாபனம் என்ற வகையில் எந்தவித இன மத பாகுபாடும் இப்படைக்குகிடையாது. இலங்கை போன்ற பல இனத்தவர்களும், பல மதத்தவர்களும் வாழும் ஒரு நாட்டில் வேறுபட்ட விசுவாசமுடையவர்கள் இப்படையில் இருப்பதை சகித்துக்கொண்டிருக்கமுடியாது. இப்படையிலுள்ளவர்கள் இலங்கை பொலிஸ் படையிலுள்ளவர்களே. தனிப்பட்ட சமூக, மத நம்பிக்கைகளை ஒவ்வொருவரும் தம்முடனேயே வைத்துக்கொள்ளக் கடமைப்பட்டவர்கள்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எஸ். ஏ. திஸநாயகா 1962—63-ம் நிதி வருடத்துக்கான தமது நிர்வாக அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

### கொலைக் குற்றம் அதிகரிப்பு

அவர் தமது அறிக்கையில் மேலும்தெரிவித்துள்ளதாவது:

வருடாவருடம் கொலைக்குற்றங்கள் அதிகரித்தே வருகின்றன. வைத்திய நிபுணர்களின் சேவையும் வைத்தியத்துறையில் விஞ்ஞான வளர்ச்சியின் முன்னேற்றமுமே பலரது உயிரைக் காப்பாற்ற உதவின எனக்கூறலாம். இப்படி இல்லாதுவிடின் பலர் இறந்தவர்களது பட்டியலில் சேர்க்கப்படவேண்டி நேர்ந்திருக்கலாம்.

### உயிரின் மதிப்பு குறைந்து விட்டது

இதுவிஷயத்தில் நான்ஒன்று குறிப்பிட விரும்புகின்றேன். இப்போது மனிதனின் உயிரின் மதிபபு மற்றஎல்லாவற்றிலும்பார்க்க மிகக் குறைந்துவிட்டது என்றே நான் கூறுவேன். வேலையில்லாத் திண்டாட்டம் இப்போது உச்ச நிலையை அடைந்துள்ளது. கொலைக்குற்றங்களைத் தடைசெய்ய மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வலுவிழந்து காணப்படுகின்றன. எந்த ஒரு குற்றவாளியையும் தப்புவித்துவிடக்கூடிய விதத்தில் வழக்கறிஞர்கள் சட்டத்தை மீறிவிடுகிறார்கள். பொதுஜன அபிப்பிராயமும் ஆபத்துக்கிலக்கானவரைவிட குற்றவாளி சார்பாகவே இருக்கிறது

### புதிய பிரச்னைகள்

இவ்வித குற்றங்களைவிட இப்போது வேறுவித குற்றங்களும் அதிகரித்து பொலிஸாருக்குப் புதிய பிரச்னையைத் தோற்றுவித்துள்ளது. நேர்மையின்மையும் பிறரை ஏமாற்றி மோசடி செய்வதுமே இவை. இது ஏழ்மையால் செய்யப்படுவதில்லை. இதை ஒரு பெரிய தொழிலாக பணம்படைத்த சிலர் மேற்கொண்டுவருகின்றனர். தேசிய தலைவர்கள் இவ்வித மோசடிகளை ஒழித்துக்கட்டுமுகமாகப் பொது மக்களை ஊக்குவிக்கவேண்டும்.

### கசிப்பும் சூதும்

சட்டவிரோதமாகக் கசிப்பு தயாரிப்பதும் சூது விளையாடுவதும் பொலிஸாரை எதிர்நோக்கியுள்ள மற்றப் பிரச்னைகள். இவற்றை பொது மக்களின் நலன் கருதியே பொலிஸார் ஒழித்துக்கட்ட முயற்சி மேற்கொள்கின்றனர் என்பதை அவர்கள் அறியவேண்டும். பொதுமக்களிடமிருந்து நன்மை விளைவிக்கக்கூடிய நல்ல கண்டனங்களை எதிர்பார்க்கும் அதேவேளையில் பொலிஸாரும் பொதுமக்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்தான் என்பது நினைவுபடுத்தப்படவேண்டும்.

### உத்தியோகத்தர் பற்றுக்குறை

1962-ம் வருடம் இடம்பெற்ற சதிமுயற்சியைத் தொடர்ந்து 20 உயர்தர உத்தியோகஸ்தர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டும் கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டும் உள்ளார்கள். இதனால் அதிக பொறுப்புக்கள் மற்றவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ளன. இவ்வித பற்றுக்குறையால் பொதுமக்கள் பாதிக்கக்கூடாது என உணர்ந்து இவர்கள் கடமையாற்றிவருகிறார்கள். இவ்வித நிலையில் அரசகரும மொழி காரணமாக எம்மை விட்டுப் பல உயர்தர அதிகாரிகள் ஓய்வு பெறுகிறார்கள். இதுபற்றிப் பொதுமக்கள்தான் அபிப்பிராயம் தெரிவிக்கவேண்டும்.

### சீரற்ற கட்டடங்கள்

பல இடங்களில் பொலிஸ் நிலையங்கள் சீரற்ற கட்டடங்களில் இயங்கிவருகின்றன. மிகவும் மோசமான வாழ்க்கைத்தரத்தில் நமது ஆட்கள் வாழ்ந்துவருகிறார்கள். நிதி பற்றுக் குறையால் பல கட்டடங்கள் சீர்திருத்தமுடியாதிருக்கின்றன.

### வீதி விபத்துக்கள்

வீதிகளில் விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படாததால் வீதிகளில், விபத்துக்களில் சிக்கி இறப்பவர் தொகை அதிகரித்துவருகிறது. காலஞ்சென்ற நீதி மந்திரி திரு. ஏ. பி. பெரேராவின் திட்டத்தின்படி வீதிவிபத்துக்கள் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு தனியே ஒரு கோர்டு விரைவில் அமைக்கப்படவிருப்பது குறித்து நான் மகிழ்ச்சி கொள்கிறேன்.

### பொலிஸ் பெண்கள்

பெண்கள் பொலிஸ் படையில் சேர்த்துக்கொள்வது அவ்வளவு வரவெற்கத்தக்கதாக இல்லை.

### பொலிஸ் நாய்கள்

எமது பொலிஸ் நாய்கள் மிக்க உபயோகமான காரியங்களைச் செய்துள்ளன. பொலிஸ் நாய்களின் செயல்களால் பொதுமக்களுக்கு அவற்றில் மிக்க அபிமானம் வளர்ந்துள்ளது.

### சிறந்த சேவை

பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பஸ் சாரதிகளைவிட குறைவான சம்பளம் பெற்றபோதும் அவர்கள் சிறந்த சேவையை அளிக்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடப்படவேண்டுமென்றும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# இராமகிருஷ்ணா, விவேகானந்தர் விழா

கொழும்பு, புதன்

சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு ஜயந்தி கொண்டாட்ட இறுதிவிழாவும் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் பிறந்தினவிழாவும் இம்மாதம் 26-ம் 27-ம், 28-ந் திகதிகளில் இராமகிருஷ்ணன் மிஷன் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

26-ந் திகதி ஸ்ரீ இராமகிருஷ்ணர் பிறந்ததின விழா நீதியரசர் சிறிஸ்கந்தராசா தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் வண நந்தசேன தேரோ, திரு. இலக்ஷ்மணன், சுவாமி சிறிரங்கானந்தா ஆகியோர் முறையே சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகியவற்றில் "இராமகிருஷ்ணர் வாழ்க்கையும், போதனைகளும்" என்னும் பொருள் பற்றிப் பேசுவார்கள். 27-ந் திகதி பலரது இன்னிசைக்கச்சேரிகள் நடைபெறும். 28-ந் திகதி விவேகானந்தர் நூற்றாண்டு கொண்டாட்ட இறுதிவிழா நீதிஅமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. டி. ஜே. ஆர். குணவர்த்தனா தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் "சுவாமி விவேகானந்தரின் போதனைகள்" என்னும் பொருள் பற்றி வண டமுனுமேய ஞானரத்ன தேரோ சிங்களத்திலும், திரு ஏ. எம். ஏ. அஸீஸ் தமிழிலும் டாக்டர் ஆனந்தா குருகே, ஹரிஹர ஐயர் ஆகியோர் ஆங்கிலத்திலும் சொற்பொழிவ ற்றுவர்.

—

# பஸ் சேவை தடைப்படுத்தப் பட்டது

கம்பகா, புதன்

மத்தமாறுவிலுள்ள வீதியில் போக்குவரத்து செய்ய முடியாதபடி ஒரு கோஷ்டியினர் வழி மறித்ததால் கம்பகா மினுவாங்கொடை வீதியில் பஸ போக்குவரத்துச் சேவை தடைப்பட்டது.

இந்தப் பகுதியால் சென்ற பல பஸ்கள் பஸ் நிறுத்தப்படும் இடத்தில் நிறுத்தப்படாது சென்றதனால் ஆத்திரம் கொண்டதாலேயே இவர்கள் இப்படிச் செய்ததாகக் கூறப்படுகிறது.

சிறிது நேரத்தின் பின் பொலிசார் இதில் தலையிட்டுபோக்குவரத்துச் சேவையைத் தொடர்ந்து நடைபெறச் செய்தார்கள்.

—

# தேவாரத் திருமுறை வகுப்பு

யாழ்ப்பாணம், புதன்

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவில் வீதியிலுள்ள 'திருநாவுக்கரசநாயனார் குருபூஜை மடத்தில்' சென்ற சித்திரை வருடப் பிறப்புத்தொடக்கம் தேவாரத் திருமுறை வகுப்பு ஒழுங்காக நடாத்தப்படுகின்றது. வகுப்பு புதன், சனி ஆகிய இருநாட்களிலும் பிற்பகல் 4 மணி தொடககம் நடைபெறுகின்றது. இங்கு இப்போது ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளுமாக 16 பிள்ளைகள் பயிலுகின்றார்கள். வகுப்பு ஆசிரியர் இசைவல்லார் குப்பிளான் செல்லத்துரை. நீர்வேலிச் சைவ சமய சங்கச் சார்பில் இந்த வகுப்பு நடத்தப்படுகின்றது.

### புன்னாலைக்கட்டுவனில்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் ஆலயத்திலும் இசைவல்லார் செல்லத்துரை தேவாரப் பண் வகுப்பு நடத்திவருகிறார் பண் வகுப்பு கிழமைக்கு இருமுறை நடத்தப்படுகிறது.

# இரண்டு மாதத்துள் வேலை வாய்ப்பு

கொழும்பு, புதன்

பெட்ரோலியம் கம்பனிகளில் வேலை செய்து வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் எல்லோருக்கும் இரண்டு மாத காலத்துக்குள் மீண்டும் வேலை வாய்ப்பளிக்கப்படுமென பெட்ரோலியம் கார்ப்பரேஷன் தலைவர் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை தெரிவித்தார்.

வட்டார விஸ்தரிப்பு கமிஷன் விசாரணை

# 'அரசியல் ரீதியில் மாநகரசபை நிர்வாகம் இதனால் மக்களே பாதிக்கப்படுகின்றனர்!"

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் நிர்வாகம் 'துரையப்பா-துரைராசா' அரசியல் ரீதியில் நடைபெறுவதனால் நகர மக்களின் பொதுநன்மை கவனிக்கப்படுவதில்லை என்றும், சில வட்டாரங்களில் அரைகுறையான வேலைகளுடன் மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றும் யாழ்ப்பாண மாநகரசபையின் கொழும்புத்துறை வட்டார அங்கத்தவர் திரு. தம்பு-கந்தையா நேற்றுபிற்பகல் யாழ்ப்பாண மாநகரசபையின் வட்டார நிர்ணய சபையின் முன் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

நேற்று இரண்டாவது தினமாக யாழ்ப்பாண மாநகரசபை வட்டார தனிநபர் நிர்ணய சபை, முன்னாள் மாவட்ட நீதிபதி திரு. சி. எக்ஸ். மார்ட்டினின் தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட ஸ்தலஸ்தாபன உதவி கமிஷனர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் காரியதரிசியாகக் கடமை புரிய நடைபெற்றது.

திரு. தம்பு கந்தையா மேலும் சாட்சியமளித்ததாவது:

கொழும்புத்துறை வட்டாரம் வகுக்கபபடும் பொழுது வாக்காளர்களின் தொகை பற்றி கவனிக்கக்கூடாதென்றும் மிகப் பரந்ததும் ஜனத்தொகை செறிந்திருப்பதினும் பிற்போக்கான அவ் வட்டாரத்தின் விஸ்தீரணத்தையே முக்கியமாகக் கவனிக்கவேண்டுமென்றும் திரு. கந்தையா வேண்டிக்கொண்டார். மேலும் கரையோர மக்கள் 600 பேர் வரையில் உள்ள கொழும்புத்துறையை கரையோரமக்களின் பிரதிநிதி ஒருவர் இடம்பெறக்கூடியதாக வகுக்கப்படல்வேண்டுமெனவும் வற்புறுத்தினர்.

### 20 வீத வரி அறவிடப்படும்

வட்டார நிர்ணய சபைத் தலைவர் திரு. எக்ஸ். மார்ட்டின் வருமானங் குறைவாக இருக்கும் பொழுது மாநகர சபை என்ன செய்யலாமென்ற பொழுது திரு. தம்பு-கந்தையா ஏனைய மாநகர சபைகளிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் வரிகுறைவாகவே அறவிடப்படுகின்றதெனவும் தமது பகுதியின் அபிவிருத்திக்கு மககள் பங்கு பற்றக் கடமைப் பட்டவர்களேயென்றும் ஆகக்குறைந்தது இருபது நூற்றுவீதம் வரி அறவிடப்படவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

மாநகரசபை எல்லையை விஸ்தரிக்கவேண்டுமென்றும் கொக்குவில் நல்லூர் கிராமசபை எல்லையிலிருந்து சில பகுதிகளைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் திரு. கந்தையா மேலும் குறிப்பிட்டார்.

நல்லூர் கிராமசபைத் தலைவர் திரு எஸ். கே சபாபதி பகிரங்கமாக வெளியாகவுள்ள அபிவிருத்திசெய்யப்படாத தமது கிராமசபைப் பகுதியைச்சேர்ந்த அரியாலையை மாநகரசபையுடன் சேர்க்கலாமென்றும் நன்கு அபிவிருத்தியடைந்த பகுதிகள் சேர்க்கப்படுவதை அப்பகுதி மக்கள் எதிர்ப்பதாகவும் கூறினர் என்றும் அது மிக விநோதமானதாக வுள்ளதாகவும் அடுத்ததாகச் சாட்சியமளித்த முகாந்திரம் எஸ். ஏ. வைத்திலிங்கத்திற்கு நிர்ணயசபைத் தலைவர் எடுத்துக் காட்டினர்.

மேலும் நேற்று திரு. சபாபதி சாட்சியமளித்ததும் திரு. சபாபதியுடன் தாமும் உதவிஸ்தலஸ்தாபன சபை உதவிக் கமிஷனர் ஆகியோருடன் நல்லூர் கிராமசபைப்பகுதியைப் பார்த்தபொழுது மாநகர சபைப் பகுதியைப்போல் அபிவிருத்திபெற்றிருப்பதைக் கண்டதாக அறிவித்தார். மேலும் 1961-ம் ஆண்டு நல்லூர் கிராமசபைப்பகுதி பட்டின சபையாக உயர்த்தப்படவேண்டுமென்று கிராமசபை கோரியதாகவும், 1962-ம் ஆண்டில் தமது கோரிக்கை நிறைவேற்றப்படவில்லையேயென்று வருத்தப்பட்டு தீர்மானம் நிறைவெற்றினர்களென்றும் பின் 1963-ம் ஆண்டில் தமது பகுதி அபிவிருத்தியடையாதபடியால் கிராமசபையாகவே மீண்டும் இருக்கவேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேற்றபபட்டது. மிக விநோதமாகவிருக்கிறது எனத் திரு. மார்ட்டின் அறிவித்தார்.





BLACK FLAG

பக் கில்லர்

மந்திர சக்தி போன்று மூட்டைகளை கொன்று விடுகிறது.

கரப்பொத்தான்கள், சிலந்திப் பூச்சிகள், எறும்புகள், படுக்கை மூட்டைப் பூச்சிகள், மற்றும் ஊரும் பூச்சிகளிலிருந்தும் பாதுகாக்க இதோ உத்தரவாதத்துடன் கூடிய மருந்து. பக் கில்லர். இதில் மலாத்தியான், டில்ட்ரன், பிரித்ரின்ஸ் ஆகியன அடங்கியுள்ளன.

ஸ்ப்ரே இணைப்புடன் கூடிய கைக்குகந்த போத்தலாக கிடைக்கும்.

இன்றே உங்கள் வியாபாரியிடம் ஒரு போத்தல் வாங்குங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:

ஹாயிஸ் பிரவுண் அன் கம்பெனி லிமிட்டெட்,

மக்கலம் ரோடு, கொழும்பு.

BKI

# உத்தியோக மொழி இலாகா ஒழிக்கப்படுமா?

கொழும்பு, புதன்

உத்தியோக மொழி இலாகா ஒழிக்கப்பட விருப்பதாக தெரியவருகிறது. இவ் இலாகாவை ஒழித்து அதன் முக்கிய வேலையை கல்வி இலாகாவின் பிரசுரப்பகுதியிடம் கையளிப்பதென திறைசேரி உத்தேசித்துள்ளதாம். திறைசேரியின் இந்த முடிவை உத்தியோக மொழி இலாகாவில் கடமையாற்றும் பல உத்தியோகஸ்தர்கள் ஆதரித்துள்ளனர்.

இப்பொழுது நீதி அமைச்சின் கீழ் இயங்கிவரும் உத்தியோக மொழி இலாகாவில் இரண்டு பிரிவுகள் உள்ளன. அவற்றில் ஒன்றான உத்தியோக மொழிப் பகுதி சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் செய்வதிலும், பிரசார பகுதியான மற்றது பாடநூல் பிரசுர வேலைகளையும் கவனித்து வருகின்றன.

உத்தியோக மொழியை அமுல் செய்யும் பகுதியில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு போதிய வேலை இருப்பதில்லை எனவே அந்தப் பகுதியை ஒழித்து, வேண்டிய ஊழியர்களை திறைசேரியில் வைத்துக்கொண்டு மாற்றவர்களை வேறு இலாகாக்களுக்கு மாற்றம் செய்யலாம் எனவும் அப்பகுதி ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். உத்தியோக மொழி இலாகாவை ஒழித்து அதன் முக்கிய வேலையை கல்வி இலாகாவிடம் அளிப்பதில் தாமதம் ஏற்படுவதற்கு சில உயர்தர அதிகாரிகளே காரணமெனவும் அவர்கள் உத்தியோக மொழி இலாகாவை சில தனிப்பட்டவர் நன்மைக்காக புறம்பாக வைத்திருக்கவே விரும்புகிறார்கள் எனவும் உத்தியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர். குறிப்பிட்ட இலாகாவில் சிங்களத்தில் தேர்ச்சியுடைய தகுதியான பட்டதாரிகள் இருப்பதால் அவர்களை, தேவைப்படும் வேறு இலாகாக்களுக்கு மாற்றி தக்கபயனை அடையலாம் எனவும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
Richard Widmark
in
The Secret Ways
(World War -2 Story)

## வானொலி நிகழ்ச்சிகள்

### வியாழன் 25-6-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை — கே. ராமச்சந்திரன், 7-15 குரல்வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மன்றம், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 7-00 "நாமும் நாடும்", 7-15 நேயர்விருப்பம், 7-45 தொடர்நாடகம் — 'மட்டக்களப்பு மாப்பிள்ளை', 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 லயவிந்யாசம் — ஏ. சந்தனகிருஷ்ணன், 9-30 சாஸ்திரீயசங்கீதம், 10-00 நிலையஒலிப்பதிவுகள்.

## பிரதமர் இன்று காலி விஜயம்

கொழும்பு, புதன்

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நாளை வியாழக்கிழமை காலிக்கு விஜயம் செய்வார்.

# 'ஆன்மீக வளர்ச்சிக்கு உடல்உறுதிஅவசியம்'

## கல்லூரி விளையாட்டுப் போட்டியில் நீதிபதி அறிவுரை

மாவிட்டபுரம், புதன்

"ஆன்மீக வளர்ச்சிக்கு உடல் உரமும். வளர்ச்சியும் அத்தியாவசியம் தேவைப்படுகிறது என்று ஆன்மிகச் செம்மல் சுவாமி விவேகானந்தரே கூறியிருக்கின்றார். உடல் உரம் பெறுவதற்கு, உறுப்புக்கள் நன்கு வளர்ச்சி பெறுவதற்கு, விளையாட்டு அரங்குகளில் பெறும் பயிற்சி பேருதவி அளிக்கிறது" என பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. அப்துல் காதர், நடேஸ்வராக் கல்லூரி இல்லங்களுகிடையிலான விளையாட்டுப் போட்டி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுகையில் கூறினர்.

இவ்விழா கல்லூரி அதிபர் திரு. க. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது.

திரு. அப்துல் காதர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இயற்கையாகவே விளையாட்டு இயல்பை மனிதன் பெற்றிருக்கிறான். நடப்பது, ஓடுவது ஆடு பாடுவது போன்ற தன்மைகளை உற்றுப்பார்க்கும் போது இயற்கையாகவே உடலை உறுதிப் படுத்துவதற்கு இவை உதவி புரிவதை நாம் அறியலாம். இலக்கியங்கள் மூலமாகவும் இயற்கை நியதி மூலமாகவும் உடல் உறுதிப் படுத்தப்படுகிற தன்மையை நாம் உணரலாம். இருந்தும் இந்த 20-ம் நூற்றாண்டிலும் சில பெற்றோர்கள் தமது பிள்ளைகள் இவ்வித விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதை விரும்பாமலிருக்கிறார்கள் என்பதை அறிய ஆச்சரியப் படுகிறேன் பிள்ளைகள் வெறும் புத்தகப் பூச்சிகளாக இருந்தால் மட்டும் போதாது. மாணவர்கள் அவர்கள் பெறும் அறிவைக் கொண்டு எதையும் சாதித்துவிட முடியாது. புத்தகங்களை கற்பதும் உடலை உரப்படுத்துவதும் இணைந்து செல்ல வேண்டும்.

நடேஸ்வராக் கல்லூரியின் முன்னை நாள் அதிபர் திரு. கிருஷ்ணபிள்ளையின் பாரியார் பரிசில்களை வழங்கினர்.

### போட்டி முடிவுகள்

வள்ளுவர், கம்பர், இளங்கோ, பாரதி ஆகிய இல்லங்களிடையே நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் வள்ளுவர் இல்லம் 166 புள்ளிகளைப் பெற்று இவ் வருடத்துக்கான சாம்பியன் வெள்ளிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. கம்பர், இளங்கோ ஆகிய இல்லங்கள் தலா 151 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தை பெற்றன. பாரதி இல்லம் 144 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தைப் பெற்றது. சாம்பியன் வெள்ளிக் கிண்ணம் பெற்றவர்களின் விபரம்:

மேல்பிரிவு: செல்வன் எஸ். சற்குணசீலன (இ), செல்வி யே. மேரிசூரியா (பா).

மத்திய பிரிவு: செல்வன் கே. சண்முகநாதன் (இ), செல்வி எஸ். மீனாகாந்தி (இ).

கீழ்ப்பிரிவு: செல்வன் கே. கனகலிங்கம் (க), செல்வி எம். சந்திரா (இ).

அஞ்சல் போட்டியில் பாரதி இளங்கோ, கம்பர், வள்ளுவர் ஆகிய இல்லங்கள் முறையே 36, 34, 25, 23 ஆகிய புள்ளிகளை பெற்றன. பாரதி இல்லத்திற்கு அஞ்சல் ஓட்ட சாம்பியன் வெள்ளிக் கிண்ணம் வழங்கப் பட்டது. கயிறு இழுத்தல் போட்டியில் முதலாவதாக வந்த கம்பர் இல்லத்திற்கு பரிசு வழங்கப்பட்டது.

## "பண்டைய நடைமுறையை பழகவேண்டும்"

உடுப்பிட்டி, புதன்

"தமிழர்கள் சிலர் தங்களுக்குத் தமிழ் தெரியாது என்று கூறுமளவிற்கு நாகரிகம் அவர்களை அழிவுப்பாதையில் இட்டுச்செல்கிறது. தமிழினத்தின் பண்டைய பண்பட்ட கலாச்சாரங்களை நடைமுறையில் நாம் பழகிக்கொள்ளுவதால் நாம் எமது வாழ்கையில் தமிழின் சுவையை அனுபவிக்கமுடியும். தமிழை வளர்க்க இதைவிடச் சிறந்தவழி வேறில்லை. தமிழின் பெருமையை உலகுக்குணர்த்த நாம் தயங்கக் கூடாது".

உடுப்பிட்டித் தமிழ் மன்றத்தின் ஓராண்டு நிறைவுவிழாவிற்குத் தலைமைவகித்த திரு. சி. தில்லைநடராஜன் மேற் கண்டவாறு பேசினர்.

திருவாளர்கள்: ஜே. ஜெயக்குமார், க. நீலகண்டன், ஈ. எம். ஆர். ஆனந்தன், யோகராஜ் ஆகியோரும் பேசினர்.

"தமிழுக்கும், தமிழினத்திற்கும் எவ்விடர் நேரிட்டாலும் அவ்விடர் களையத் தமிழ்மன்றம் சகல வழிகளிலும் முயற்சிக்கும்" என்னும் தீர்மானமும், பாரதி விழாவை விரிவான முறையில் நடத்துவது என்னும் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

# 'புற்று நோயாளர்களுக்கு புனர் வாழ் வளிக்குக'

## நிவாரண சங்க தலைவர் வேண்டுகோள்

சுழிபுரம், புதன்

"புற்றுநோய் ஒரு பரம்பரை வியாதியல்ல. இதனை ஆரம்ப நிலையில் கண்டறிந்து தகுந்த சிகிச்சையளிப்பதன் மூலம் குணப்படுத்தமுடியும். எனவே பொதுமக்கள் புற்று நோயைக் கண்டு பயப்படவேண்டியதில்லை" என்று இலங்கைப் புற்றுநோய் நிவாரண சங்கத் தலைவர் டாக்டர் எம். கே. ஏ. சந்திரசேகரா கோப்பாய் ஆசிரிய கலாசாலை மண்டபத்தில் நடைபெற்ற புற்றுநோய்த் தடைப் பிரசாரக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சமூகஜோதி திரு. சி. தியாகராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் டாக்டர் சந்திரசேகரா மேலும் பேசுகையில், புற்றுநோயாளர்களுக்குப்புனர் வாழ்வளிக்கும் பணியிலீடுபட கிராமங்கள்தோறும் தொண்டர்கள் முன்வரவேண்டுமென்றார். யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள புற்றுநோய் நிவாரண சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து புற்றுநோய்க்கெதிராகப் போராட உதவுமாறும் அவர் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

டாக்டர் வி. ரி. பசுபதி பேசுகையில், யாழ்ப்பாண மாவட்ட புற்றுநோய் நிவாரண சங்கம் தற்போதுபுற்றுநோய்த் தடைப்பிரசார இயக்கத்தினை ஆரம்பித்துள்ளதென்றும் அதன் முயற்சிகளுக்கு மக்கள் பூரண ஆதரவளிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

வடபகுதி சுகாதார சேவை அதிபர் டாக்டர் ஜி. என். ஆர். நதானியல் உட்பட மற்றும் பலரும் பேசினர். சங்க செயலாளர் திரு. த. துரைசிங்கம் நன்றிகூறினர். ஈற்றில் புற்றுநோய் சம்பந்தமான திரைப்படகாட்சிநடைபெற்றது

மகத்தான 5-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) ரீகல் (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (ஹட்டன்)
ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) வெம்பிளி (கண்டி) சீதா (பலாங்கொட) மொடேர்ன் (பதுளை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
நடிக்கும்



நானும் ஒரு பெண்

ஜூன் மீ 26-ந் திகதி முதல்
கேப்பிட்டல் - ரீகல்
மற்றும் சினிமாஸ் திரைகளில்

கொஞ்சும் குமரி

## தேவை

இடைக்குறிச்சி கரம்பை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு மனேஜர் தேவை.

வயது: 25 – 35

தராதரம்: எஸ். எஸ். ஸி. (ஆங்கிலம், கணிதம் சித்தி) கூட்டுறவுப் பயிற்சிக்கும், கூட்டுறவு சங்க அனுபவத்திற்கும் விசேஷ கவனம் எடுக்கப்படும்.

பிணை: ரொக்கம் ரூபா 1000–00.

ஆதனம்: ரூபா 3000-00.

சம்பளம்: மாதம் ரூ. 100-00 / 10 X 6

ரூ. 160-00. (எல்லாம் உட்பட).

5-7-64க்கு முன்னர் சங்கத் தலைவருக்கு பதிவுக் கடிதம் மூலம் விண்ணப்பிக்கவும்.

எம். எஸ். கந்தையா,
காரியதரிசி,
இடைக்குறிச்சி கரம்பை,
எம். பி. சி. எஸ்.,
613 வரணி.

## வரி விளம்பரம்

### House To Let

Spacious house with drainage, flush lavatory, shower bath To-Let at 9, Somasundaram Avenue, Jaffna-Contact Peter. 538

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50, வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்
சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஒயின்மென்ற்
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துளைவு போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்ல விசேஷ பாம்,
தயாரிப்பாளர்கள்:

GABRIELS, Chunnakam. 273

### வாடகைக்கு

ஓட்டுமடம் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளுடனும் வீடு குறைந்த வாடகைக்கு உண்டு. ஆசிரியர் செல்வநாயகம், ஓட்டுமடம். 540

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலியில் வீடு, கிணறு, மாமரம், தென்னைமரம் உள்ள 5 பரப்பு வளவு உடனடியாக விற்பனைக்கு உண்டு. போக்குவரத்துக்கு மிக விசாலமான ஒழுங்கை உண்டு. தொடர்பு கொள்ளவும். எம். எஸ். ஸ்ரீகாந்தன், 3-ம் கட்டை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 543

12 பரப்பு தோட்டககாணி யாழ்–பலாலி மெயின் றோட் 5-ம் கட்டையில் விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கு உகந்தது. கீழ்க்கண்ட விலாசத்திற்கு 28-6-64 க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும் திருமதி குமாரசுவாமி, "ரஜனம்", கட்டாப்பாளி றோட்டு, ஆனைக்கோட்டை. 544

# நாடெங்கும் நேற்று நடைபெற்ற போசன் பண்டிகை

## பல்லாயிரம் மக்கள் கலந்து கொண்டனர்

கொழும்பு, புதன்

போசன் பண்டிகையை முன்னிட்டு இன்று அநுராதபுரம், மிகிந்தலை, மகியங்கனை ஆகிய இடங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர்.

மின்சார தீபாலங்காரங்களும், வாண வேடிக்கைகளும் நடைபெற்றன.

இன்றைய தினம்தான் இலங்கையில் புத்தமதம் பரப்பப்பட்டது. நாடெங்கும் விஹாரைகளில் சமயச் சடங்குகளும் பிரார்த்தனைகளும் நடைபெற்றன.

---

## தொழிலாளர் கையில் துறைமுகம்

கொழும்பு, புதன்

துறைமுகம் விரைவில் தொழிலாளர்களால் நிர்வாகிக்கப்படும் என்று போக்குவரத்து மந்திரி திரு. அனில் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுக கமிஷன் காரியாலயத்தில் நடைபெற்ற தொழிற்சங்க பிரதிநிதிகளின் கூட்டத்தில் பேசும் பொழுதே போக்குவரத்து மந்திரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனது திட்டத்தைப் பற்றி முதலில் தொழிலாளர்களுடன் கலந்து ஆலோசிக்கப் போவதாகவும், அதன்பின் மந்திரி சபையின் அங்கீகாரத்தை பெறப்போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

கோண்டாவில்

## சிசுக் கொலை வழக்கு ஜூலை 7ம் தேதி விசாரணை

யாழ்ப்பாணம், புதன்

கோண்டாவில் சிசுக்கொலை வழக்கு நேற்றுக் காலை பதில் நீதிபதி திரு. எஸ். சி. கதிரவேலு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, ஊமையின் வாக்குமூலத்தை விளக்கிக் கூறுவதில் பயிற்சி பெற்ற முதலியார் திரு. திஸநாயக்கா வராததால், பதில் நீதிபதி இவ்வழக்கு விசாரணையை அடுத்தமாதம் 7 ம் தேதிவரை ஒத்திப்போட்டார்.

நேற்றைய விசாரணையில் எதிரியின் மகனும், பிறவி ஊமையுமானவர் சாட்சியமளிக்கவிருந்தார். முதலியார் வராத காரணத்தால், இவர் நேற்று சாட்சியமளிக்கவில்லை.

எதிரியின் சார்பில் திரு. சி. கணேசலிங்கம் திரு. ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார். பிறவி ஊமையானவரின் வாக்குமூலம் பதிவு செய்யப்படுவதைப் பார்க்கும்பொருட்டு நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

## குவாஸி குமாஸ்தாக்கள்

கொழும்பு, புதன்

குவாஸி குமாஸ்தாக்கள் சேவையிலிருந்து 4,000 அங்கத்தவர்களை குமாஸ்தாக்கள் சேவைக்குச் சேர்த்துக்கொள்ள நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா தீர்மானித்துள்ளார்.

இதனைச் செயல்படுத்துவதற்கு நிதிமந்திரி ஒரு திட்டத்தை தயாரித்துவருகிறார். குவாஸி குமாஸ்தாக்கள் சங்கம், திறைசேரி உத்தியோகஸ்தர்களை சந்தித்து இதுபற்றிப் பேசுவார்கள்.

---

## முனீஸ்வரர் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வர ஆலய ஸ்நபனாபிஷேகம் இன்று ஆரம்பமாகின்றது. பதினைந்தாவது நாள் சங்காபிஷேகமும் மணவாளக் கோலத் திருவிழாவும் நடைபெறும். பதினைந்து நாட்களிலும் கதாப்பிரசங்கம், சமயச் சொற்பொழிவு ஆகியவை நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

---

## சுருவிலில் இசைவிழா

ஊர்காவற்றுறை, புதன்

சுருவில் ஸ்ரீ அரிஹரபுத்திர ஐயனார் கோவிலில் நாளை முதல் வெள்ளிக்கிழமை வரை சங்காபிஷேகமும், அகில இலங்கை இசையாசிரியர் சங்க ஆதரவில் இசைவிழாவும் நடைபெறும். இசைவிழாவில் பல கலைஞர்கள் பங்கு பற்றுகிறார்கள்.

---

## பாராட்டு வைபவம்

சுழிபுரம், ஞாயிறு

உதவிக் கூட்டுறவு மேலாணையாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. இ. இராசரத்தினத்தின் சேவையைப் பாராட்டி வலி.மேற்கு கூட்டுறவாளர்களினால் ஓர் பாராட்டுவைபவம் நடாத்தப்பட்டது.

---

## காமராஜருக்கு 62 வயது

சென்னை, ஜூன் 24

வருகிற ஜூலை 15-ந் திகதி காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜரின் 62-வது பிறந்ததினமாகும். காங்கிரஸ், கம்யூனிஸ்ட், தமிழ் தேசியக்கட்சி ஆகியவற்றின் ஆதரவில் கொண்டாட்டக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் என்று யாழ்ப்பாணத்தில் ஓரன்பர் கூறியிருந்தார். புரியவில்லை. என்ன தெரியுமா அது? ஞானப்பால்தான். ஆனைப்பால் என்று ஆகிவிட்டதாம்! ஞானசம்பந்தருக்கு உமையம்மை ஞானப்பால் அளித்தாரல்லவா? அந்த வைபவம் தினசரி அதிகாலையில் மதுரை கோவிலில், நடைபெறுகிறது. நூற்றுக்கணக்கானவர் அந்த "ஆனைப்பால்" வாங்கிப் பருக ஆவலுடன் கூடுகின்றார்கள். அன்று ஞானசம்பந்த பீடாதிபதியும் அங்கு ஞானப்பாலுண்டார். அதைக் காணும்போது பழைய கதையெல்லாம் நினைவு வந்தது.

பல மூர்த்திகளையும் தரிசித்தபின்னர் ஆடி வீதி வழியாக, விசேஷமேள இன்னிசை முழங்க சந்நிதானம் ஊர்வலமாக வந்து மடாலயத்துக்குத் திரும்பினார்.

பகலில் மடத்திலே ஞானசம்பந்தருக்கு விசேஷபூசை. வலது கைவிரல் தோடுடைய செவியனைக்காட்டுகிறது. இடது கையில் இறைவன் அளித்த பொற்தாளம் இவற்றுடனே திவ்யாலங்காரத்துடன் உயிரோவியம் போல் பொலிந்தார். சைவத்துக்குப் புத்துயிரளித்த அந்த வீரக்குழந்தை பின்னர் அன்னதானம் அன்று நேருவின் மறைவால் ஊரில் எல்லாஹோட்டல்களும் மூடப்பட்டிருந்ததால் சமாளிக்கமுடியாதபடி அவ்வளவு கூட்டம்.

இரவில் கோவில் மரியாதைகளுடன் சந்நிதானம் கோவிலில் கல்யாண மண்டபத்துக்குச்செல்ல அங்கு ஞானப்பால் வைபவம் நடந்தது. மேடை மீது ரிஷபாருடராக அம்மையப்பர் இருப்ப கீழே, பல்லக்கில் குழந்தை ஞானசம்பந்தர் எழுந்தருளினார் "யாரப்பா இந்த எச்சில் பாலை உனக்களித்தது?" என்று ஓதுவாமூர்த்தி ஒருவர் கேட்க "தோடுடைய செவியன்" என்ற பதிகத்தை இருவர் பாட தீபாராதனை நடந்த காட்சி உள்ளம் கவர்ந்தது.

விசேஷ அலங்காரத்துடனே ரதத்தில் பின்னர் ஞானசம்பந்தர் வீதிவலம் வந்தார். முதல் நம்பர் மேளக்கச்சேரி. ஒரே ஒரு குறை ஞானசம்பந்தரின் தேவார இன்னிசையை முழங்கி இருந்தால் மிகப்பொருத்தமாக இருந்திருக்கும். ஞானசம்பந்தர் விழாவிலே அவரது தேவார இன்னிசைகளைப் பொழிய வேண்டாமா?

ஞானசம்பந்தர் ஜோதியில் கலந்த வைபவமெல்லாம் முடிந்து மகாசந்நிதானம் கொலுவீற்றிருந்து, ஆசீர்வதித்தார்கள் பின்னர் பல சைவமணிகளுக்கும் பட்டங்கள் வழங்கினார். இருவருடங்களுக்கு ஒருமுறை பட்டங்கள் வழங்கப்படுகின்றனவாம். இலங்கையிலும் பலருக்கு இம்முறை பட்டங்கள் கிடைத்துள்ளன.

அன்று இரவெல்லாம் சிவராத்திரிதான். இந்த வைபவத்தைக் கண்டபின், இந்த குரு பீடத்தின் ஒரு பிரதிநிதி ஈழத்திலே திருக்கேதீச்சரத்தில் அமர்ந்து இங்குள்ள சைவ சமூகத்துக்கு வழிகாட்டவேண்டிய சமயம் வந்துவிட்டதென்பதை உணர்ந்தேன்.

* * *

மானினேர்விழி மாதராய்வழுதிக்குமா பெருந்தேவிகேள்,
பானல்வாயொரு பாலன் ஈங்கிவன் என்று நீபரிவெய்திடேல்,
ஆனைமாமலையாதியாய இடங்களிற் பல அல்லர்சேர், ஈனர்
கட்கெளியேனலேன் திரு ஆலவாயரன் நிற்கவே

—திருஞானசம்பந்தர்

**தேவை**

தேசிய சுவீப் விற்பதற்கு கிராமந்தோறும் ஆள் தேவை. 3 சத வீதம் கொமிஷன் கொடுக்கப்படும். ரூ. 100/- கட்டுப்பணத்துடன் நேரில் சமுகமளிக்கவும். கொழும்புபிளான் ஜுவலறிகவுஸ், நல்லூர், யாழ்ப்பாணம். தொலைபேசி: 461 493

அளவெட்டி கொலை வழக்கு

# "என்னுடைய தலைக்கு மேலாக எதிரி தந்தையைக் குத்தினர்"

## ஜி. ஜி. குறுக்கு விசாரணையின்போது காலம்சென்றவரின் சகோதரி சாட்சியம்

மாவிட்டபுரம், புதன்

"முதலாம் எதிரி எனக்கு முன்னும், எனது தந்தை எனக்குப் பின்னும் நிற்கிறபோது முதலாம் எதிரி எனது தலைக்கு மேலால் வில்லுக்கத்தியால் எனது தந்தையை குத்தினார். அக்குத்து தந்தையின் கழுத்தில் விழுந்தது. அவர் உடனடியாக அறிவு மயங்கி விழுந்து விட்டார்."

அளவெட்டி கொலைவழக்கில் சாட்சியான காலம் சென்றவரின் சகோதரியான திருமதி கணேசதாசன்- இராசம்மாவை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இன்று குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் அளவெட்டியைச் சேர்ந்த இளையதம்பி வைத்திலிங்கம், சுப்பர்-செல்லப்பா, ஆழ்வார்-ஐயாத்துரை ஐயாத்துரை - முருகையா ஆகிய நால்வரும் சென்ற ஏப்ரல் மாதம் 14-ம் திகதி சின்னத்தம்பி - சுந்தரமூர்த்தியைக் குத்திக்கொலை செய்ததாகவும் அதே நேரத்தில் சின்னத்தம்பியை குத்தி படுகாயம் ஏற்படுத்தியதாகவும் சுன்னாகம் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் திரு. வி. செல்லத்துரையின் அனுசரணையுடனும் திரு. ஆர். கண்ணுத்துரையின் உதவியுடனும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆஜரானார்.

சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வி. மூர்த்தியின் உதவியுடன் திரு. எஸ். நடராசா வழக்கை நடத்தினர்.

இவ்வழக்கு இன்று மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபாண முன்னிலையில் தொடர்ந்து எதிரிதரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது திருமதி இராசம்மா தொடர்ந்து சாட்சிமளிக்கையில் கூறியதாவது:-

"1-ம் எதிரி வந்து தகப்பனைக் கூப்பிட்டார். அப்பொழுது தகப்பனார் விறாந்தையில் சுருட்டு புகைத்துக் கொண்டிருந்தார். நான் படியில் இருந்தேன். தகப்பனார் 1-ம் எதிரியிடம் சென்று என்னடா செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார். எதிரிகள் ஒன்றும் கூறவில்லை. அப்போது 1-ம் எதிரி கத்தியை விரித்து வைத்திருந்தார். நான் அப்போது 1-ம் எதிரிக்கும் அப்புவுக்கும் இடையில் நின்றேன். எனக்கும் எதிரிக்கும் இடைவெளி ஒன்றரை அடியிருக்கும். தகப்பன் பக்கத்தில் பின்னால் நின்றார். நான் எதிரியைத் தள்ளினேன். நான் தள்ள முதலாம் எதிரி எனது தலைக்குமேலால் அப்புவைக் குத்தினார். எனது கை எதிரியின் நெஞ்சில் இருக்கும்போதுதான் குத்து விழுந்தது.

1-ம் எதிரி வந்து தகப்பனை கூப்பிடும்போது இவர்கள் எங்கள் குடும்பத்தினருக்கு எவ்வித தீங்கும் விளைவிப்பார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. அப்பு விழும்போது நான் பிடிக்கவில்லை. அப்போது சுந்தர்மூர்த்தி ஓடிவந்தார். ஓடிவந்து 1-ம் எதிரிக்கு அடித்தார். அவர்கள் குத்தினார்கள்- அவர் விழுந்து விட்டார். நான் குழறினேன். சுந்தரமூர்த்தி விழுந்ததும் அவரின் மேல் இருந்து இரத்தம் பெருகியது. நான் அவரின் இரத்தப் பெருக்கைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

மேல் விசாரணை அடுத்த மாதம் 2-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## எமது தலைவிதி . . .

(1- ம் பக்கத்தொடர்ச்சி)

சாங்கம் நிர்ப்பந்திக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

திரு. எஸ். சரவணமுத்து மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

இம் மகாநாட்டில் பத்து பிரேரணைகள் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக ஏற்று கொள்ளப்பட்டது. மகாநாட்டின் முடிவில் மாணவர்கள் நகரசபை மண்டபத்தில் இருந்து யாழ்ப்பாண பிரதான வீதிகளின் வழியாக கோஷங்கள் எழுப்பியபடி ஊர்வலமாகச் சென்றார்கள். "படித்த வாலிபர்களை பட்டினி போடாதே" 'பாடசாலைகளை உடனே எடு' "வெள்ளை 'யூனிபோம் வேண்டாம்" என்று எழுதிய அட்டைகளை ஊர்வலத்தில் ஏந்திச் சென்றார்கள்.

மாணவ இயக்கத்தின் உத்தியோகத்தர் தெரிவில் எல்லோ அங்கத்தவர்களும் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார்கள்.

தலைவர்: பிரபாகசந்தர், உப-தலைவர்கள்: சரவணமுத்து, ஸ்ரீகந்த தாஸ், ஜோர்ஜ் எஸ். கந்தசாமி, சி. கனகசிங்கம், சி. பாலசுப்ரமணியம், பொதுசெயலாளர்: செ. யோகநாதன், உதவி செயலாளர்: கே. யோகேந்திரா, பொருளாளர் நகேந்திரராசா, உதவிபொருளாளர்: பன்னீர் செல்வம், செயற்குழு அங்கத்தினர்கள்: கே. சண்முகலிங்கம், திருநாவுக்கரசு, விநாயகமூர்த்தி, தனபாலசிங்கம், ஆர். பாலேந்திரா, குலேந்திரன், வேதநாயகம், நடேசன், ரத்தினசிங்கம், பாலேந்திரா, கோபால், சிவானந்தன் மற்றும் பாடசாலைகளிலிருந்தும் ஒவ்வொரு மாணவர் வீதம் செயற்குழுவிற்கு தெரிவுசெய்யப்படுவார்களென தலைவர் கூறினார்.

---

## பல்கலைக்கழகம் . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருப்பு மகா வித்தியாலயம்

வி. ராஜலிங்கம், டி. சின்னத்தம்பி.

திருகோணமலை சென். மேரீஸ் கல்லூரி

செல்வி இ. வில்லியம்ஸ்.

வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம்

எஸ். ஏ. அருள்பிரகாசம், டி. பரதராமபிள்ளை, கே. செந்தில்நாயகம்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் (மட்டக்களப்பு)

கே. பாலசுந்தரம், எம். நாகலிங்கம், எம். சிவநேசராஜா, வி. சிவசுப்பிரமணியம்.

---

## முத்தையா ஞாபகதினம்

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர் சாதனா பாடசாலையின் பெற்றார் ஆசிரியர் சங்கம் அதன் முன்னைநாள் தலைமை ஆசிரியருமான காலஞ்சென்ற திரு. க. மு. முத்தையாவின் நினைவுதினத்தை இன்று சிறப்பாகக் கொண்டாடவிருக்கின்றனர்.

இன்று மாலை ஆரம்பமாகும் இக்கொண்டாட்டத்தில் 'விடிவெள்ளி' என்ற புனைபெயரில் திரு. முத்தையா வெளியிட்ட கவிதைகள் புத்தக உருவத்தில் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் திரு. தா. ச. துரைராசாவால் வெளியிடப்படும். திரு. முத்தையாவின் உருவப்படமும் திரைநீக்கஞ் செய்யப்பட்டு பல பெரியார்கள் உரைநிகழ்த்துவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில்

இந்தியா-இலங்கை நட்புறவுச் சங்கத்தை இந்திய ஹைகமிஷனர்

**மேன்மைதங்கிய B.K. கப்பூர் அவர்கள்**

யூன் மீ 26-ந் திகதி மாலை 6 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்துவைப்பார்கள்.

இதைத்தொடர்ந்து கதம்பக்கச்சேரியும் படக்காட்சியும் நடைபெறும்.

எல்லோரும் அழைக்கப்படுகின்றனர்.

இணைக்காரியதரிசிகள்.

சிவன் கோவில் மேலை வீதி
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.